செய்தி வெளியீடு எண்.378/2010 நாள்:26.05.2010

**இந்திய விமானப்படையில் நான் டெக்னிக்கல் டிரேட்ஸ்களில் பணியாற்றும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு**

வேலூர் மாவட்டத்தில் 10+2 இன்டர் மீடியட் படிப்பில் (அறிவியல், கலை (அ) வணிகவியல் பாடங்களுடன்) குறைந்த பட்சம் 50% மதிப்பெண்கள் பெற்று தேர்வாகியும், அரசு அங்கீகாரம் பெற்ற பாலிடெக்னிக் இன்ஸ்ட்டிடியூட்டில் மூன்று வருடம் டிப்ளமோ (ஏதாவது ஒரு பிரிவில்) குறைந்த பட்சம் 50% மதிப்பெண்கள் பெற்று தேர்வாகி, 01.01.1990 முதல் 28.2.1994 ஆம் தேதிக்குள் பிறந்த தமிழகம் மற்றும் புதுவை மாநில திருமணமாகாத இளைஞர்கள் ஆகஸ்ட் 2010 ல் நடைபெற உள்ள தேர்வு மூலம் குருப் 'Y' நான் டெக்னிக்கல் டிரேட்ஸ்களில் (ஆட்டோ டெக், ஜிடிஐ & ஐஏஎப்(பி) தொழீற்பிரிவுகள் தவிர ) படைவீரராக பணியாற்றும் வாய்ப்பை பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

விண்ணப்பங்கள் சேர வேண்டிய முகவரி சென்ட்ரல் ஏர்மென் செலக்ஷன் சென்டர், போஸ்ட் பாக்ஸ் நெம்பர் 11807, நியு டெல்லி- 110 010, சேர வேண்டிய கடைசி தேதி 10.6.2010. சாதாரண தபால் மட்டும், பதிவு தபால், விரைவு தபால், கூரியர் ஏற்புடையவை அல்ல.

விளம்பரம், வேலைவாய்ப்பு, பாடத்திட்டம், மாதிரி வினாத்தாள், தேசிய அளவிலான தேர்ச்சி பட்டியல், மற்றும் சேர்க்கை பட்டியல் ஆகியவைகளுக்கு **www.indianairforce.nic.in** என்கின்ற வெப் தளத்தை பார்க்கவும். மேலும் விவரங்களுக்கு 8 ஏர்மென் ஸெலக்ஷன் சென்டர், ஏர்போர்ஸ் ஸ்டேஷன் தாம்பரம், சென்னை-46 முகவரியிலும், தொலைபேசி : 044-22791853 (அ) 044-22396565 **Extn** – 7808 தொடர்பு கொண்டு மேலும் விவரங்களை பெற்று தகுதியானவர்கள் இந்திய விமானப்படை பணியில் சேர்ந்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

செய்தி வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்.